2017 ஜனவரி 31]

23—

நெல் கொள்முதல் நிலையக் கட்டடம்

***4838—திரு. பி.வி. பாரதி:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை நெஞ்சில் நிறுத்தி அஞ்சலி செலுத்தி (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள். மாண்புமிகு அமைச்சர் சொல்லுங்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *தியாகத் தலைவி சின்னம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதியில் 2016 ஆம் ஆண்டில் செம்மங்குடி மற்றும் அரசூர் ஆகிய இடங்களில் தலா 30 இலட்சம் ரூபாய் செலவில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இது தவிர கடவாசல், திருச்சங்காட்டாங்குடி, நெம்மேலி மற்றும் கொண்டத்தூர் ஆகிய நான்கு இடங்களில் மொத்தம் 1 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் நெல் கொள்முதல் நிலையங்களுக்கு கட்டடம் கட்டும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. பாரதி அவர்கள்.

திரு. பி.வி. பாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைப் பணிவோடு வணங்குகிறேன். எங்களை இந்த மாமன்றத்திலே பேசுவதற்கு நாட்டு மக்களுக்கு அறிமுகப்படுத்திய தலைவர், "மக்களால் நான், மக்களுக்காக நான்" என்று வாழ்ந்து மறைந்திட்ட, எங்களுடைய தலைவர், இதய தெய்வம் அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாபெரும் மக்கள் இயக்கமாம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்றிருக்கின்ற எங்களுடைய மதிப்பிற்குரிய சின்னம்மா அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எங்களுடைய சீர்காழி தொகுதியிலே மொத்தம் 46 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. அவற்றில், 10 நெல் கொள்முதல் நிலையங்கள்தான் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, இரண்டு இடங்களிலே கொள்முதல் நிலையங்கள் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், என்னுடைய தொகுதி கடற்கரை சார்ந்த தொகுதியாக இருப்பதால், வடகிழக்குப் பருவமழை, அப்போது ஏற்படுகின்ற காற்று, புயல் இவற்றால் விவசாயிகள் தங்களுடைய நெல்லைக் கொண்டுவந்து பாதுகாப்பாக வைப்பதற்கு உரிய வசதி இல்லை என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். மீதமுள்ள ஏறத்தாழ 30 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கும் மிக விரைவில் நிரந்தரக் கட்டடம் கட்டிக் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களில் ஏகபோக கொள்முதல் திட்டம்

2017 ஜனவரி 31]

(Monopoly procurement scheme), இணை கொள்முதல் திட்டம் (Parallel procurement scheme), லெவி கொள்முதல் திட்டம் (Levy procurement scheme) ஆகியவை நடைமுறையில் இருந்ததை மாற்றியவர் தமிழகத்தின் தன்னிகரில்லா முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். 2002 ஆம் ஆண்டு, இன்றைக்கு செயல்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்திற்கு மத்திய அரசோடு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து, விவசாயிகளுடைய கவலையைத் தீர்த்து, விவசாயிகளுக்கு உரிய விலையை கிடைக்கச் செய்த தலைவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதனை இந்த நேரத்தில் இந்த அவைக்கு பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதோடுமட்டுமல்லாமல், நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறப்பதிலும், அவற்றுக்கு கட்டடங்கள் கட்டிக் கொடுப்பதிலும் முன்னோடியாகத் திகழ்ந்தவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். தமிழ்நாடு முழுவதும் 343 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. தற்பொழுது 31 கோடியே 45 இலட்சம் ரூபாய் செலவில் 106 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

அதேபோல, நாகப்பட்டினம் மாவட்டத்தில் மட்டும் தற்பொழுது 84 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. மேலும், டெல்டா மாவட்டங்களில் 54 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கான கட்டடங்கள் 17 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டு வருகின்றன என்பதனையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய சீர்காழி சட்டமன்றத் தொகுதியில் 46 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் இயங்கி வருவதாகவும், அவற்றில் 10 நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு மட்டும்தான் நிரந்தரக் கட்டடங்கள் இருப்பதாகவும், மற்றவற்றுக்கு உடனடியாக நிரந்தரக் கட்டடங்கள் கட்டித் தர வேண்டுமென்றும் இங்கே கோரிக்கை வைத்தார்கள். எங்கெல்லாம் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு நிரந்தரக்

கட்டடங்கள் தேவைப்படுகின்றனவோ அங்கெல்லாம் உடனடியாகக் கட்டிக் கொடுக்க வேண்டுமென உத்தரவிட்ட தலைவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில், எந்த இடத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு நிரந்தரக் கட்டடம் தேவையென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எண்ணுகிறாரோ, அந்த இடத்தில் கட்டடம் கட்ட வேண்டுமானால் 33 செண்ட் நிலம் தேவைப்படுகிறது. அதனை, விவசாயிகள் தானாக முன்வந்து கொடுக்கிறபொழுது, அங்குள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்கு நிரந்தரக் கட்டடம் உடனடியாகக் கட்டிக் கொடுக்கப்படும் என்பதையும், அப்படி இல்லையென்று சொன்னால், வகைப்படுத்தப்பட்ட அரசு புறம்போக்கு நிலங்களில் கட்டடம் கட்டுவதற்கு ஏற்புடைய இடத்தை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் அடையாளம் காட்டினால், அந்த இடத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்கு நிரந்தரக் கட்டடத்தை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உடனடியாகக் கட்டிக் கொடுக்கும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 24, மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

24—

மருத்துவமனை தரம் உயர்த்துதல்

***2983 திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செந்தூர் தொகுதி, திருச்செந்தூரிலுள்ள அரசு மருத்துவமனையை மாவட்டத் தலைமை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?